திரு. சி.த. சிதம்பரம் அவர்கள் 1971 ஆம் ஆண்டு முதல் 1976 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் அன்றைய இராமநாதபுரம் மாவட்டம் காரைக்குடித் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு போற்றுதலுக்குரிய முறையில் பணியாற்றியுள்ளார்.

திரு. மு. சுந்தரராசன் அவர்கள் 1977 ஆம் ஆண்டு முதல் 1980 ஆம் ஆண்டு வரையிலும் மற்றும் 1980 ஆம் ஆண்டு முதல் 1984 ஆம் ஆண்டு வரையிலும் இராமநாதபுரம் மாவட்டம், விருதுநகர் தொகுதியிலிருந்து தமிழ்நாடு சட்டமன்றப் பேரவைக்கு இருமுறை தேர்ந்தெடுக்கப்பட்டு சிறப்பான வகையில் பணியாற்றியுள்ளார்.

திரு. டி. டி. முத்துக்குமாரசுவாமி நாயுடு அவர்கள் 1952 ஆம் ஆண்டு முதல் 1957 ஆம் ஆண்டு வரை தென்னாற்காடு மாவட்டம், திருக்கோயலூர் (பொது) தொகுதியிலிருந்து அன்றைய ஒருங்கிணைந்த சென்னை மாநில சட்டமன்றப் பேரவைக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டு செவ்வனே பணியாற்றியுள்ளார். மேலும், 1957 ஆம் ஆண்டு முதல் 1961 ஆம் ஆண்டு வரை மக்களவை உறுப்பினராகவும் பணியாற்றியுள்ளார்.

அன்னாரின் மறைவு குறித்து அவர்களை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், அனுதாபத்தினையும் இப்பேரவையின் சார்பிலும் என் சார்பிலும் தெரிவித்துக் கொள்கிறேன்.

இயற்கை எய்திய அப்பெரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித்துளிகள் அமைதி காத்தனர்)

முற்பகல் 10-05

(2) இரங்கல் தீர்மானம்.

காஞ்சி காமகோடி பீடாதிபதி அருள்திரு சந்திர சேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரியார் அவர்கள் மறைவு.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இரங்கல் தீர்மானம். கீழ்க்கண்ட இரங்கல் தீர்மானத்தைப் பேரவை முன்வைக்கிறேன்:

"காஞ்சி மாமுனிவர் எனவும், காஞ்சிப் பெரியவர் எனவும், பரமாச்சாரியார் எனவும் அழைக்கப்பட்டு தெய்வீக சக்தியாகப் போற்றப்பட்டு வந்த காஞ்சி காமகோடி பீடாதிபதி அருள் திரு சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சார்ய ஸ்வாமிகள்

1994 மார்ச் 17]

தமது 100-வது வயதில் 8-1-1994 அன்று சித்தி அடைந்த செய்தி, குறிப்பாக தமிழகத்திற்கும், பொதுவாக இந்தியத் துணைக் கண்டத்திற்கும், உலகின் பல பகுதியினருக்கும் பெரும் துயரம் அளிக்கும் செய்தியாகும். அவர்கள் தனது வாழ்நாளில் கடைபிடித்து வந்த எளிமையும், ஏழை எளியோர், உயர்ந்தோர் தாழ்ந்தோர் என்ற எவ்வித பாகுபாடும் இன்றி அனைத்துத் தரப்பு மக்களையும் ஆதரித்து ஆசீர்வதித்த தன்மையும் எல்லோராலும் போற்றிப் பாராட்டப்பட்டவையாகும். காஞ்சி மடத்திலிருந்து அருள்பாலித்து வந்த ஆதிசங்கரர் வழிவந்தோரில் குறிப்பிட்டு சிறப்பாகக் கருதப்படும் சங்கராச்சாரியாராக வாழ்ந்து மறைந்தவர் ஆவார்.

சைவ ஆகமம், சில்பம், தமிழ் ஆராய்ச்சி, ஆழ்வார், நாயன்மார்களின் புகழைப் பரப்புதல், நீதிநெறிகளை வளர்த்தல், தமிழகமெங்கும் திருக்கோயில்கள் பலவற்றுக்குத் திருப்பணிகள் செய்தல், தெருக்கூத்து, வில்லிப்புத்தூரார் பாரதம், கம்ப இராமாயணம், திருப்பாவை-திருவெம்பாவை போன்ற காவியங்களை மக்களிடையே பரப்புதல், சிறைக் கைதிகளுக்கும் நீதி போதனை, வெள்ளம், புயல் போன்ற சமயங்களில் உதவி புரிதல், பண்டைய தமிழ் அறிஞர்களுக்குப் பாராட்டளித்தல், நாதஸ்வர கலைஞர்கள் போன்ற தமிழகத்திற்கே உரிய கலை விற்பன்னர்களைக் கௌரவித்தல், தேசிய ஒருமைப்பாட்டை வளர்த்தல், அனைத்துப் பிரிவினர்க்கும் பரிவு காண்பித்தல் ஆகியன அவரது ஆன்மீகப் பணிகளில் குறிப்பிடத்தக்கவையாகும்.

மேலும் நாடு சுதந்திரம் அடைவதற்கு ஆசி வழங்கியது, தானே கடைசி வரை கதராடை அணிந்தது, வரதட்சிணையை வெறுத்து ஆடம்பரமில்லாத திருமணங்களைச் செய்வித்தலை போன்றவை அவருடைய அருஞ்செயல்களில் குறிப்பிடத் தக்கனவாகும். இமயம் முதல் குமரிவரை விரிந்து, பரந்து கிடக்கும் நம் தாய் நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ந்து பாதயாத்திரையாகத் தன் சுற்றுப்பயணத்தை அமைத்துக்கொண்டு மக்களை ஆசீர்வதித்த தன்மை வேறு எந்த ஆன்மீகப் பெருந்தகைக்கும் இல்லாது பரமாச்சார்யார் அவர்களுக்கே மட்டும் உரித்தான தனிச் சிறப்பாகும்.

அவருடைய இழப்பு ஆன்மீக உலகத்திற்கு ஈடுசெய்ய இயலாத ஒன்றாகும். தனது 100-வது வயதிலும் மனம் தளராது பொதுத் தொண்டாற்றி, ஆசிகளை வழங்கியது போற்றுதற்குரியதாகும். தன்னை சந்தித்து அளவளாவ வேண்டுமென்று விரும்பிய வெளிநாட்டவர்களையும் தன்பால் ஈர்த்து ஆசி வழங்கிய பெரும் சிறப்புக்குரியவராகத் திகழ்ந்தார்கள். இவ்வாறான புகழுக்குரிய காஞ்சி மாமுனிவர் அவர்கள் சித்தி அடைந்தது குறித்து இந்தச் சட்டமன்றப் பேரவை ஆழ்ந்த கவலையையும், மிகுந்த வருத்தத்தையும் கொள்வதோடு, இப்பெரியவரைப் பிரிந்து வருந்தும் ஆன்மீகப் பெருமக்களுக்கும்

அவர்பால் பற்று கொண்டு பணியாற்றிய பேரன்பர்களுக்கும் தன் ஆழ்ந்த இரங்கலை இப்பேரவை தெரிவித்துக்கொள்கிறது.

இத்தீர்மானத்தை நிறைவேற்றும் முகத்தான் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று இரண்டு மணித் துளிகள் அமைதி காக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்று 2 மணித்துளிகள் அமைதி காத்தனர்)

(3) வினாக்கள்—விடைகள்

(அ) உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினாக்கள்—விடைகள். வினா எண் 1, திரு. கே. தவசி, மாண்புமிகு நிதி அமைச்சர்.

1—

ஆண்டிப்பட்டியில் சார்நிலைக் கருவூலம் அமைத்தல்.

22709—திரு. கே. தவசி:

மாண்புமிகு நிதி அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஆண்டிப்பட்டி தாலுகாவுக்கென ஆண்டிப்பட்டியில் சார்நிலைக் கருவூலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன், நிதி அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): 1993–94 ஆம் ஆண்டு பகுதி-2 திட்டத்தின் கீழ் அரசாணை எண். 364, நிதித்துறையின் நாள்: 21–5-1993-ன் படி ஆண்டிப்பட்டியில் ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்கப்பட்டு 17–8–1993 அன்று முதல் இயங்கி வருகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. கே. தவசி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆண்டிப்பட்டியில் சார்நிலைக் கருவூலம் அளித்த மாண்புமிகு இதயத் தெய்வம் புரட்சித் தலைவி அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்து, அது தற்சமயம் வாடகைக் கட்டிடத்தில் இருந்து கொண்டிருக்கிறது. புதிதாக கட்டிடம் கட்டுவதற்கு அரசிடம் ஏதாவது செயற்குறிப்பு இருக்கிறதா என்று அறிய விரும்புகிறேன்.